# பாவேந்தம்

20

## கட்டுரை இலக்கியம் - 1

CENTER FOR BHARATHIDASAN STUDIES
00533
LIBRARY
BHARATHIDASAN UNIVERSITY

ஆசிரியர்
பாரதிதாசன்

பதிப்பாசிரியர்கள்:

முதுமுனைவர் இரா. இளங்குமரன்
முனைவர் இரா. இளவரசு
முனைவர் கு. திருமாறன்
முனைவர் பி. தமிழகன்

இளங்கணி பதிப்பகம்

# வந்தவர் மொழியா?
# செந்தமிழ்ச் செல்வமா?

# 1

## காட்சி

தமிழ்ச் சொற்களையெல்லாம் வடசொற்கள் என்று ஆக்குவதில் பார்ப்பனர்க்குத் தனி ஆசை. அவ்வாறு செய்வதால் இந்நாட்டுக்கும் அவர்கட்கும் இல்லாத தொடர்பை உண்டு பண்ணிக் கொள்ளு கிறார்கள். ஆனால் இந்த தீயமுயற்சியை அறிவுடைய தமிழர்களும், நடுநிலையுடைய உலகமும் அறிந்து நகையாடக் கூடுமே யென்பதை அவர்கள் கருதுவதேயில்லை.

தூங்கிக் கொண்டிருந்தார்கள் தமிழர்கள். அது அந்த நாள். பார்ப்பனர் அல்லல் புரிந்தார்கள் அளவில்லாமல்.

விழித்துக் கொண்டார்கள் தமிழர்கள். இது இந்த நாள். அல்லல் புரியாது அடங்கினார்களா எனில், இல்லை.

காட்சி - தொழிற் பெயர். அதில் காண், முதனிலை. சி-தொழிற் பெயர், இறுதிநிலை, காண் என்பதின் இறுதியில் உள்ள-ண், என்ற மெய்யானது - சி. என்ற வல்லினம் வந்தால் - ட்-ஆகும் என்பது சட்டம். அதனால்தான் காட்சி என்றாயிற்று. காணல், காண்டல், காட்சி அனைத்தும் ஒரே பொருள் உடையவை. எனவே 'காட்சி' தூய தமிழ்ச் சொல். இதைப் பார்ப்பனர் தம் ஏடுகளில் காக்ஷி என்று போடுவார்கள். காட்சியைக் காக்ஷி ஆக்குவதில் - தமிழ்ச் சொல்லை வட சொல் ஆக்குவதில் அவர்கட்குள்ள ஆசை புரிகிறது அல்லவா? இவ்வாறு காக்ஷி என்று பார்ப்பனர்கள் தம் ஏடுகளில் கொட்டை எழுத்துக்களில் வெளியிடுவதால் நம்மவர்களும் அதையே பின்பற்றத் தொடங்கி விடுகிறார்கள். பார்ப்பான் சொன்னது பரமசிவன் சொன்னதல்லவா? அதனால்தான் நாம் பொதுவாக நம்மவர்கட்குச் சொல்லுகிறோம்:

தமிழ் தமிழர்க்குத் தாய்! தமிழிற் பிழை செய்வது தாயைக் குறைவுபடுத்துவதாகும். படக் காட்சிக்குரிய அறிவிப்போ, திருமண அழைப்பிதழோ, வாணிக அறிவிப்புப் பலகையோ எழுதும் போது தமிழறிஞர்களைக் கலந்து எழுதுங்கள் என்கிறோம்.

இனி, இவ்வாறு தமிழ்ச் சொற்களையெல்லாம் பார்ப்பனர் வடசொற்கள் என்று சொல்லிக் கொண்டு போகட்டுமே, அதனால் தீமை என்ன என்று தமிழரிற் சிலர் எண்ணலாம்.

அவ்வாறு அவர்கள் இந்நாள் வரைக்கும் விட்டுவைத்ததால் என்ன ஆயிற்றுத் தெரியுமா? வடமொழியினின்று தான் தமிழ் வந்தது, வடவர் நாகரிகத்திலிருந்து தான் தமிழர் நாகரிகம் தோன்றியது என்றெல்லாம் அவர்கள் சொல்லுவதோடு அல்லாமல், உலகையும் அவ்வாறு நம்பவைக்கவும் முயலுகிறார்கள்.

அது மட்டுமா? மேற்சொன்ன காரணங்களைக் காட்டி, அவர்கள் பிறப்பிலேயே உயர்ந்தவர்கள் என்னும் முடிச்சுமாறித்தனத்தையும் மெய் என்று நிலைநாட்டி வருகிறார்கள்.

'இது வட சொல்லன்று; இன்ன காரணத்தால் இது தமிழ்ச் சொல்' என்று விளக்கி வர முடிவு செய்துள்ளோம். தமிழர்கள் ஊன்றிப் படிக்க.

## கணம்

இயல்பாக ஒருவன் கண் இமைக்கும் நேரத்திற்குப் பெயர். இச்சொல் கண் என்பதிலிருந்து பிறந்தது. கண் அம் கணம் ஆகி, அது கண்ணிமைக்கும் நேரத்திற்கானதை ஈறு திரிந்ததோர் ஆகுபெயர் என்பர்.

இவ்வாறு கண் என்பது அம் பெறாமலே கண்ணிமைப் போது என்ற பொருள் தருவதும் உண்டு.

"கயற்கணின் அளவும் கொள்ளார்" - *சீவக சிந்தாமணி 1393*

என்று வந்துள்ளதும் கருதத்தக்கது. எனவே 'கணம்' வந்தவர் சொல்லன்று. செந்தமிழ்ச் செல்வமே என்று கொள்க. இதைப் பார்ப்பனர் க்ஷணம் என்ற வடசொல்லின் சிதைவு என்று கூறுவார்கள். கணமும் க்ஷணமும் ஏறத்தாழ ஒத்திருக்கின்றன. கணம் என்ற தமிழ்ச் சொல் பழந்தமிழ் நூல்களில் நாம் எடுத்துக் காட்டியவாறு காரணப்பெயராய் வந்துள்ளது. இந்நிலையில் நாம் அறிய வேண்டியது என்னவெனில், வந்தவர் நம் தமிழாகிய கணத்தை க்ஷணம் என்று தம் வாய்க்கு வந்தவாறு சொல்லிக் கொண்டார்கள் என்பதே.

## தானம்

தன்மை என்பது மை ஈற்றுப் பண்புப் பெயர் ஆகும். மை ஈற்றுப் பண்புப் பெயர்கள் அனைத்தும் பல மாறுதல்களை அடையும்.

"ஈறு போதல் இடை உகரம் இய்யாதல்
ஆதிநீடல் அடி அகரம் ஐயாதல்
தன் ஒற்று இரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனம்மிகல் இனையவும் பண்புக் கியல்பே"

என்ற நன்னூற் பாட்டினால் இன்னின்ன மாறுதல் அடையும் என்பது அறிக. மேற்சொன்ன தன்மை என்ற பண்புப் பெயர் ஈறுபோதல் என்ற சட்டத்தால் மை கெட்டுத் "தன்" என நின்றது. அந்தத் தன் என்பது ஆதி நீடல் என்ற சட்டத்தால் 'தான் என நீண்டு நின்றது. அந்தத் தான் என்பது அம் என்ற பண்புப் பெயர் இறுதி நிலை பெற்றுத் தானம் ஆயிற்று. தானம் என்பதன் பொருள் தன்மை, உணர்வு என்பன. எனவே தானம் என்பது கொடைத்தன்மை என்று உணர்தல் வேண்டும்.

தானம் என்பது ஈண்டுக் காட்டிய பொருளில் அமைந்து இருப்பதை அடியில் வரும் சிந்தாமணி (2924)ச் செய்யுளாலும் அறியலாம்.

கருங்கடற் பிறப்பின் அல்லால்
வலம்புரி காணுங் காலைப்
பெருங்குளத் தென்றும் தோன்றா
பிறைநுதல் பிணையி னீரே
"**அருங்கொடைத் தானம்**" ஆய்ந்த
அருந்தவம் தெரியின் மண்மேல்
மருங்குடை யவர்கட் கல்லால்
மற்றையவர்க் காவ துண்டோ

இச் செய்யுளில் வந்துள்ள அருங்கொடைத் தானம் என்ற தொடர் மேலே நாம் காட்டிய வண்ணம் தானம் என்பது தன்மை என்று பொருள்படுவது காண்க.

எனவே தானம் என்ற சொல் தூய தமிழ்ச் சொல் அன்றோ? இதைப் பார்ப்பனர் வடமொழிச் சொல் என்று கயிறு திரிப்பார்.

தானம் என்ற சொல் வடவர் இலக்கியத்திலும் இருக்கின்றதே எனில், ஆம், வந்தேறிகளாகிய வடவர் தமிழினின்று எடுத்துக் கொண்டார்கள் என்றே அறிய வேண்டும்.

**- குயில், 1.6.1958**

2

## இலக்கணம்

இலக்கம் - குறி. அஃதாவது, ஒருவன் எந்த இடத்தில் அம்பு விட வேண்டுமோ அந்த இடம் இலக்கம்; எந்த இடத்தை அடைய வேண்டுமோ அந்த இடம் இலக்கம்.

இலக்கம் தூய தமிழ்ச் சொல். "எல்லே இலக்கம்' என்பது தொல்காப்பிய நூற்பா.

இனி அந்த இலக்கம் என்பது, அம் என்ற சாரியைக் குறைந்து இலக்கு என நிற்பதும், அணம் என்பதை சேர்த்துக் கொண்டு இலக்கணம் என நிற்பதும் உண்டு.

(இலக்கு + அணம்) இலக்கணம் என்றால் என்ன பொருள் எனில், இலக்கை நெருங்குவது என்பதாம். அணம் - அணுகுவது. ஈறு திரிந்ததோர் ஆகு பெயர் என்பார்கள் இதை.

அண என்று மட்டும் நின்றால் என்ன பொருள் எனில், நெருங்க என்பது. இது செயவென் எச்சம்.

(இலக்கு + அண) இலக்கண என்றால் இலக்கை நெருங்க என்று பொருள். இவ்வாறு ஆன்றோர் ஆட்சியில் வந்துளதா எனில், மணிமேகலையில் 30-வது பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை 18-வது அடியில்,

"**இலக்கணத் தொடர்தலின்**" (இலக்கு+அண) என வந்துள்ளது காண்க. அதைத் தொடர்ந்தும்,

"**சொற்றகப் பட்டும் இலக்கணத் தொடர்பால்**" என வந்துள்ளது. இவற்றால் இலக்கணம் என்பது தூய தமிழ்ச் சொற்றொடர் என்பது பெற்றாம்.

இலக்கணம் என்பது லக்ஷணம் என்ற வடசொல்லினின்று வந்ததாம். இவ்வாறு தமிழாராய்ச்சி வல்லவர் என்று பிழையாக நம்மவரால் கருதப்படும் தெ.பொ. மீனாக்கி, அழகு முதலியவர்கள் கூட எழுதியும் பேசியும் வந்துள்ளார்கள்.

இவர்கள் பார்ப்பனரின் கூலிக்காகத் தமிழ் வடமொழியினின்று வந்தது என்று பிதற்றும் ஆட்கள் என்பதையும், ஆங்கிலப் படிப்பால் பிழைக்கத் தெரியாதென்று, தமிழ் தெரியும் எனத் தமிழர்களை ஏமாற்றித் திரிகின்றவர் என்பதையும் தமிழர்கள் அறிந்து வைக்க வேண்டும்.

## நேயம்

இது நேசம் என்னும் வடசொல்லின் சிதைவாம். சீவக சிந்தாமணியில் 3049-ம் செய்யுள்.

**நெய் பொதி நெஞ்சு**

என வந்துள்ளதும், அது நேயம் என்பதையே குறிப்பதும் அறியாதார் பார்ப்பனரும், பார்ப்பன அடிவருடிகளும் கூறுவதையே உளக் கொண்டு, நேயம் வடசொற் சிதைவு என்று கூறித் திரிகின்றார்கள்.

நெய் என்ற சொல்லினடியாகப் பிறந்தப் பண்புப் பெயர். ஆதலின் தூய தமிழ் என அறிக.

## மீன்

இது கூட மீனம் என்ற வடசொல்லின் சிதைவாம்.

மின்னல் என்பது அல் இறுதிநிலை பெற்ற தொழிற்பெயர். அது அவ்விறுதி நிலை கெட்டு மின் என நிற்பதுண்டு. அந்நிலையில் அதை முதனிலை தொழிற்பெயர் என்பார்கள். அம்முதனிலையாகிய மின் என்பதும் முதல் நீண்டு மீன் என்று ஆகும். அந்நிலையில் அதை முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்பார்கள்.

எனவே மீன் என்பது முதனிலைத் திரிந்தத் தொழிற் பெயர். அது தொழிலாகு பெயராக மீன் என்னும் கோளைக் குறிக்கும்.

எனவே மீன் தூய தமிழ்ச் சொல் காரணப் பெயர்.

**கோள்மின்னும் மீன்சூழ் குளிர்மாமதித் தோற்றம்**

என்ற சான்றோர் செய்யுளையும் நோக்குக. மின்னுவது மீன் எனக் காரணப் பெயராதல் உணர்க.

## ஆசை

இது ஆசா என்ற வடசொல்லின் திரிபு என்று கதைப்பர் பார்ப்பனரும், அவர் வால்பிடிக்கும் தமிழர் சிலரும்.

மனம் தன்னிலை நிற்றல், பொருள் அடையத் தக்க நிலை என்பர் அறிந்தோர். அஃதன்றி அம் மனம் வெளிப் பொருள் நோக்கி அசைதல் என்பது துன்பம் பயப்பது அன்றோ?

எனவே அசைதல், அல்லது அசைவு என்பது மனத்தின் அசைவு ஆயிற்று.

அசைதல் தொழிற்பெயர். அசை முதனிலைத் தொழிற் பெயர். ஆசை முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்.

ஆசை தூய தமிழ்ச் சொல் என்க. மனம் பிறவற்றிற் செல்லுதல் என்பது அதன் பொருள்.

உதவி என்பதற்கு ஒத்தாசை என்றது இழிவழக்காக வழங்கி வருகின்றது. இந்த ஒத்தாசை என்பதில் அசை என்பதுதான் ஆசை என நீண்டது என அறிதல் வேண்டும். அசைதல் என்பதற்கு ஆசை என ஆனதற்குப் பேச்சு வழக்கில் வந்துள்ள இதையும் ஈண்டு நினைவுறுத்தினோம்.

## பூசை

இது பூஜா என்ற வடசொல்லின் சிதைவு என்று ஏமாற்றுவார் ஏமாற்றுவர்.

பூசு+ஐ என்பன தொழிற் பெயர் முதனிலையும் இறுதி நிலையு மாகும். பூசுதல் என்பதுதானே இது?

பூசுதல் என்றால் தூய்மை செய்தல், கழுவுதல் என்பது பொருள். இவ்வழக்கு இன்றும் திருநெல்வேலிப் பாங்கில் இருக்கக் காணலாம்.

இனிப் பூசு என்ற முதனிலை அன் சாரியை பெற்றுப் பூசனை என்றும் வரும்.

எனவே, பூசை, பூசனை தூய தமிழ்ச் சொற்கள் என முடிக்க.

3

## தெய்வம்

"தெய்என் கிளவி கொள்ளலும் கோறலும்" என்பதொரு நூற்பா. பிங்கலந்தைப் பழம் பதிப்பில் காணப்பட்டது.

இதே நூற்பா "தெய்யென் கிளவி கோறலும் தெய்வமும்" என்ற வேற்றுமையுடன் புதிய பதிப்பில் காணப்படுகின்றது.

ஆதலின், தெய் என்பதற்குக் கொல்லுதல், விழுங்குதல் தெய்வம் என்பன பொருளாகக் கொண்டால் இழுக்கில்லை.

இதனால் நாம் அறியக்கிடக்கும் செய்தி என் எனில் கூறுவோம்.

அறிவு நிரம்பாத பண்டை நாளில், பெருங்காற்றையும், கனலையும், காட்டாற்றையும், வெப்புறுத்தும் வெங்கதிரையும், பெருமழையையும், விலங்குகளின் எதிர்ப்பையும் "தெய்" என்று சொல்லி வந்தார்கள்.

அறிவு நிரம்ப நிரம்ப அவற்றின் பெரும்பயனை அறிந்து அவற்றைப் பயன்படுத்துவாராயினர்.

அறிவு நிரம்பாப் போது வெறுப்புப் பொருளில் வழங்கப்பட்ட 'தெய்' அறிவு நிரம்பிய பிறகு விருப்புப் பொருளில் வழங்கலாயிற்று. தெய் என்ற சொல் அம் இறுதி நிலையும் வ் என்ற பெயரிடை நிலையும் பெற்றுத் தெய்வம் என்றாயிற்று. (தெய்+வ்+அம்)

அறிவு நிரம்பாத போது வெப்புறுத்திய ஞாயிற்றையும், நிலவுறுத்திய திங்களையும், துன்புறுத்திய தீயினையும் அறிவு நிரம்பிய காலத்து எவ்வாறு போற்றினார் என்பது நோக்கத் தக்கது.

**கொடி நிலை கந்தழி வள்ளி என்ற**
**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**
**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.**

என்ற இந்தத் தொல்காப்பிய நூற்பாவால் ஞாயிறு, தீ, திங்கள் ஆகிய மூன்றையும் வடுநீங்கு சிறப்புடைய தெய்வங்கள் என்று வாழ்த்தியது புலனாகிறதன்றோ!

மழையைத் தெய்வமாகக் கொண்டனர்; - போற்றினர். புனலைத் தெய்வமாகக் கொண்டனர்; - போற்றினர்.

இங்கு அறியத்தக்க மற்றோருண்மை என்னெனில், தெய்வம் என்ற சொல்லால் இந்நாள் சொல்லப்படுவன பயன்பொருள்களும் கண்ணையும் கருத்தையும் கவர்கின்ற பொருள்களும் ஆம்.

பசு தெய்வம், நிலம் தெய்வம், நீர் தெய்வம், சொல் தெய்வம், பெரியவர் அருளிய நூல் தெய்வம் பிறவும் தெய்வங்கள். சமையக் கணக்கர் இத்தெய்வங்களை எல்லாம் மேல் நின்று நடத்துவதோர் பெரிய பொருள் உண்டென்றும், அது கடவுள் இயவுள் என்றெல்லாம் பெயர்பெறும் என்றும் கூறினாராக, அச் சமையக் கணக்கு முற்றிய வழித் தாம் தாம் கண்ட கடவுள் இப்படி இப்படி என்று கூறுவாராகி, உலகில் கலகம் பல விளைத்து வருவராயினர்.

தெய்வம் தூய தமிழ்ச்சொல் என்பதில் தமிழர்க்கு ஏதேனும் ஐயமிருக்க முடியுமா? முடியாதன்றோ!

ஆனால் பார்ப்பனனும், அவன் வால் பிடித்துத் திரியும் சில தமிழர்களும், தெய்வம் வடசொல் என்று உளறி வருகிறார்கள்.

தெய்வம் என்பது தூய தமிழ்ச் சொல் என்பதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு வருமாறு:-

தொல்காப்பிய நூன்மரபு 24-வது நூற்பா, ய், ர்,ழ், என்னும் மூன்று மெய்யின் முன், க, த, ந, ம, ச, வ, ஞ, ய என்ற ஒன்பது எழுத்துக்களும் தனித்தனி வந்து நிற்கும் என்று கூறுகையில் "ய்" முன் "வா" வருவதற்கு எடுத்துக்காட்டாக 'தெய்வம்' என்ற சொல் காட்டப் பட்டுள்ளது.

எனவே தெய்வம் தூய தமிழ்ச் சொல் என்பதை எவராலும் மறுக்க முடியாதன்றோ?

- **குயில், 17.6.1958**

# 4

## காவியம், காப்பியம்

இவை இரண்டு சொற்களும் ஒரே பொருள் உடையவை. இவை வடசொற்கள் என்று கூறிப் பிழைப்பர் பார்ப்பனரும் அவர் அடி நத்துவாரும்.

காத்தல், காப்பு இவை இரண்டும் தொழிற் பெயர்கள். முன்னதில் **தல்** தொழிற்பெயர் இறுதி நிலை. பின்னதில் பு தொழிற் பெயர் இறுதி நிலை.

இந்த இரண்டு தொழிற் பெயர் இறுதி நிலைகட்குப் பதிலாக அம் என்ற இறுதி நிலை பெற்றுக் காவம், காப்பம் என வரின் அது பிழை யாகாது. எனவே, காவம் காப்பம் என்ற இரு தொழிற் பெயர்களும் இடையில் இகரச்சாரியை பெற்று காவியம், காப்பியம் என வந்தன என அறிதல் வேண்டும். இது எதுபோல எனில், ஓவம் என்பது இகரச் சாரியை பெற்று ஓவியம் என வந்தது போல என்க.

நெஞ்சைப் பயனற்ற வழியிற் செல்லாது நன்னிலைப் படுத்திக் காப்பது காப்பியம், காவியம் எனப் பொருள்பட்டுக் காரணப் பெயர்களாகியவாறு காண்க.

காவியம், காப்பியம் வடமொழி இலக்கியத்திலும் வருவதால் அவை வடமொழியே எனக் கூறுவாரை நோக்கி, 'உங்கள் வடமொழி இலக்கியத்தின் ஆண்டு என்ன? சொற்கள் உங்கட்கு ஏது? நீங்கள் இந்த நாட்டுக்கு வரும்போதே எல்லாச் சொற்களையும் கொண்டு வந்தீர்களா?' என்று கேட்கவேண்டும்.

'எல்லாச் சொற்களையும் நாங்கள் கொண்டுவந்தோம்' என்று அவர்கள் கூறினால் 'இமையம் என்ற சொல்லை வரும்போதே கொண்டு வந்தீர்கள் எனில் நீங்கள் இருந்த இடத்தில் இமையம் என்ற மலை இருந்திருக்கவேண்டுமே - இருந்ததா?' என்று கேட்கவேண்டும்.

## இமையம்

இமைத்தல் - ஒளித்தல். இமையமலை பனிமூட்டத்தால் ஒளி செய்தலால் அப்பெயரிட்டு அழைத்தார்கள் பண்டைத் தமிழர்கள்.

எனவே, காவியம், காப்பியம், இமையம் என்பன செந்தமிழ்ச் செல்வங்களே! வந்தவர் மொழியல்ல என நெஞ்சில் நிறுத்துக.

## வேதம்

வேதம் வந்தவர் மொழியன்று.

வேய்தல் - மறைத்தல். வேதல் என மருவியது. வேய்ந்தான் என்பது வேய்ந்தன் என மருவியது போல, பின் வேதல் என்பது வேதம் என ஆனது. ஈறு திரிந்ததோர் ஆகுபெயர். கபிலம் என்பதிற்போல.

வேய்ந்தன் என்பதில் வேய்தல் எனின் கொற்றக்குடையால் மறைத்துக் காத்தல் என்று கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு மறைமலையடிகளும் உரைத்தார். எனவே, வேதம் செந்தமிழ்ச் சொல்லே எனக் கொள்க.

## மானம்

மன்னல் தொழிற் பெயர். மன் ஈறுகெட்ட தொழிற் பெயர். அதாவது முதனிலைத் தொழிற் பெயர். மான் முதனிலை திரிந்த தொழிற் பெயர். அது முதனிலைப் பொருள் இறுதி நிலையாகிய அம் பெற்று மானம் என ஆயிற்று.

மேற்சொன்ன மன்னல் அதாவது மன்னுதல் என்றால் தன்னிலையில் மாறாது நிற்றல் என்பது பொருள்.

அதனால்தான் மானம் என்பதற்குப் பொருள் கூறிய தமிழ்ச் சான்றோர் தன்னிலையில் மாறாது நிற்றலும், மாற்றம் நிகழ்ந்துழி வாழாது சாதலும் என்று பொருள் கூறிச் சென்றார்கள்.

"தீப் பார்ப்பனர்களும்" தேப் போமீக்களும் இதை வடசொல் என்று தமக்குத் தோன்றியவாறே கூறி மகிழ்வர். மானம், உலகம் தோன்றியதுமுதல் மானத்துக்காக வாழ்ந்துவரும் தமிழரின் தூய தமிழ்ச்சொல் என்க.

## ஆதி

ஆதி என்பது வடசொல்லாம். அச்சொல்லும் திருவள்ளுவருக்கு தாய்க்குப் பெயராம். அந்தத் தாய்கூட ஒரு புலைச்சியாம்.

ஆதி வடசொல்லன்று. தூய தமிழ்ச் சொல்லே. அஃது ஆதல் எனப் பொருள்படும் தொழிற் பெயர். ஆ-முதனிலை, தி-இறுதிநிலை; செய்தி, உய்தி என்பவற்றிற் போல.

ஆதி - முதன்மை, இதை வடவர் மூலப் பிரகிருதி என்பர்.

## பகவன்

பகவான் என்று வடவர் சொல்லுகிறார்களே அதுதானாம் இது. இது கலப்பில்லாத முட்டாள்தனமான பேச்சு.

பகல் என்பதும் பகவு என்பதும் ஒரே பொருளைய சொற்கள். பகல் என்பதில் பகு முதனிலை. பகவன் என்பதில் பகவு முதனிலை. பகல் என்பதற்கும் பகவு என்பதற்கும் நடுவுநிலை. அறிவு என்பன பொருள்கள்.

பகவு என்பதற்குப் பாவேந்தர்கள் அன் இறுதி நிலை சேர்த்துப் பகவன் என்று சிறப்புறுத்துவார்கள். எனவே பகவு, பகவன் இவைகட்கு அறிவு, அறிவன் என்பன பொருள்.

பகவன் தூய தமிழ்ச் சொல்.

பகவன் வடசொல்லாம்; அது திருவள்ளுவரின் தந்தையின் பெயராம். அந்த பகவனும் பார்ப்பனனாம். ஆதியும் பகவனும், புலைச்சியும் பார்ப்பனனுமாம்.

திருவள்ளுவர் பேரறிஞராகத் திகழ்வதற்குக் காரணம் அவர் பகவன் என்னும் பார்ப்பனனுக்குப் பிறந்ததாகும். இப்படி அந்தப் பாவிகள் ஒரு கதை கட்டி விட்டிருக்கிறார்கள்.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு.**

என்ற குறளின் முதற்பாட்டில் திருவள்ளுவர் தம் பெற்றோர் நினைவாக அவர் பேர்களாகிய ஆதி பகவன் என்பனவற்றை வைத்தாராம்.

ஆதி பகவன் என்பது வடசொற்றொடர் என்று பரிமேலழகர் கதைத்ததற்குக் காரணம் கண்டுகொள்க.

இன்னொருமுறை கூறுகின்றேன். பகவன் தூய தமிழ்ச்சொல்.

**- குயில், 24.6.1958**

## 5

### கங்கை

நவ்வல், நாவல் என்பன ஒரு பொருள் உடைய தமிழ்ச் சொற்கள். இது இந்தியாவின் நடுப்பகுதியில் மிகுதி.

நாவல் மிகுதியாக நடுப்பகுதியில் இருந்த காரணத்தால் பண்டைத் தமிழர்கள் இத்தீவை நாவலந் தீவு என்றார்கள்.

தென் என்பது அழகு. அது கண்ணுக்குப் பொருளாகும்போது அழகு எனப்படும். மனத்துக்குப் பொருளாகும்போது இனிமை எனப்படும். எனவே, தென்-அழகு, இனிமை என்க.

தென் என்பதிலிருந்து தென்னை, தென்கு என்பன தோன்றின. இவற்றின் பொருள் அழகியது, இனியது என்பன. எனவே, தென்னையும் தென்கு அல்லது தெங்கும் அவ்வகையான மரத்திற்குக் காரணப் பெயர். தென்னை மரம் அதாவது தெங்கு அழகியதாக இருத்தலும் நோக்குக.

இத்தென்னை நாவலந்தீவின் தென்புறம் மிகுதி. தென்னை இருந்த காரணத்தாலேயே இப்புறத்திற்கு தெற்கு என்று கூறினார்கள் பண்டைத் தமிழ் மக்கள்.

வடம் என்பது ஆலமரம். அது வட்டமாக மேலோங்கித் தழைப்பதால் அவ்வாறு காரணப் பெயர் பெற்றது.

வடமரம் அதாவது ஆலமரம், நாவலந் தீவுக்கு வடபுறத்தில் மிகுதி. அந்தப் பக்கத்தை வடக்கு என்றார்கள் பண்டைத் தமிழர். வடக்கு என்ற சொல் வடமரம் இருத்தலால் வந்த காரணப் பெயர் என அறிக. எனவே நாவல் மரங்கள் மிகுதியாக நடுவிடத்தை அழகு செய்ததால் இத்தீவுக்கு நாவலந்தீவு என்கிறார்கள் பண்டைத் தமிழர்கள்.

தென்னை மரங்கள் அழகு செய்து சிறக்க இருந்ததால் இப்பக்கத்தை தெற்கு என்றார்கள்.

வடமரம் மிகுந்திருந்த காரணத்தால் அப்பக்கத்தை வடக்கு என்றார்கள். யார்? பண்டைத் தமிழர்கள்.

இன்னும், மேற்கு என்பதற்கு மேல் (உயரம்) என்பதுதான் பொருள். உயர்ந்திருக்கும் பக்கம் ஆதலால் அது மேற்கு என்கிறார்கள்.

கிழக்கு என்றால் கீழ் (தாழ்த்தி) என்பதுதான் பொருள். அப்பக்கம் தாழ்ந்திருத்தல் கருதியே கிழக்கு என்கிறார்கள்.

இதுவரைக்கும் சொல்லியவற்றால் தெரிந்து கொள்ள வேண்டியவை என்னவெனில்:

1. நாவலந்தீவு முழுவதும் இருந்தவர்கள் தமிழர்கள் மட்டும் தான்.
2. நாவலந்தீவு முழுவதும் வழங்கியது தமிழ் மட்டுந்தான்.
3. நாவலந்தீவு முழுவதும் இருந்த - இருக்கின்ற பொருள்கள் அனைத்துக்கும் உள்ள பெயர்கள் அனைத்தும் தமிழர் இட்ட தமிழ்ப் பெயர்களே!

ஆரியர்கள் பிறகு வந்தார்கள். பிறகு வந்தார்கள் என்றாலும் அவர்கள் பிறகு இந்நாட்டுப் பொருள்களுக்குப் பெயர் வைத்திருக் கலாம் என்றால் அதெப்படி முடியும்? எந்த இடத்திலிருந்து வந்தார்களோ அந்த இடத்தில் இல்லாத இமையத்திற்குப் பெயர் எப்படி அவர்கள் கொண்டு வந்திருக்க முடியும்?

கங்கு என்பது கரைக்குப் பெயர். தமிழில் கங்கு- கங்கை என்று வருவதற்கு இலக்கணச் சட்டம் இருக்கிறது. அதை ஐயீற்றுடைக் குற்றுகரச் சொல் என்பார்கள். கங்கையாறு கரையாற் சிறப்புற்றது பற்றி அதைக் கங்கு அல்லது கங்கை என்றார்கள் அங்கிருந்த பண்டைத் தமிழர்கள்.

கங்கா என்ற வடமொழிச் சிதைவுதான் கங்கை என்று பார்ப்பனர் பகர்வர். அவர் கால்நத்திகள் கழறுவர்.

நாவலந்தீவுக்கே உரிய பொருள்களுக்கெல்லாம் நாவலந்தீவின் மொழியாகிய தமிழ்ப் பெயர்தான் உண்டு என்று காட்டப்பட்டது இதுவரைக்கும்.

பொதுவான பொருள்களுக்கு அமைந்த சொற்களிற் பெரும் பாலனவும் தமிழ்ச் சொற்களாகும் என்பது மறுக்க முடியாததாகும்.

## சலம்

ஜலம் என்ற வடசொல்லின் சிதைவு என்று கூறுவார்கள் கலகக் காரர்கள்.

சலம் என்பது காரணம் பற்றிவந்த தூய தமிழ்ச் சொல். சல, சல என்று இயங்குவது காரணமாகத் தண்ணீர் 'சலம்' என்று பெயர் பெற்றது. இவ்வாறு மறைமலையடிகளும் கூறியருளினார். இதைப் பார்ப்பனர் ஜலம் என்றார்கள் அல்லவா? நாத் திருந்தாமை அவர் கொண்ட குற்றம். அதனால் சலம் அவர் மொழியாகிவிட்டது.

**- குயில், 1. 7. 1958**

# 6

## உவமை

உவமை என்பது உபமானம் என்பதன் சிதைவாம். இவ்வாறு மொட்டைத் தலைக்கும் முழந்தாளுக்கும் முடிபோடுவர் பார்ப்பனரும், அவர் அடியாரும். பொருள் நிலை உணர்வித்து உவப்புறச் செய்வது உவமை. உவத்தல், உவமை ஒரு பொருட் சொற்கள்.

தாமரைமலர் முகம் என்பதில் தாமரை மலர் உவமை, முகம் உவமை ஏற்கும் பொருள்.

இவ்வாறு கூறாமல் முகம் என்று மட்டும் சொன்னால் முகம் என்ற பொருளின் நிலையை நன்கு உணரச் செய்ததாகாது என்பதை நோக்குக. உவப்புறச் செய்வது உவமை எனின் இச்சொல் காரணப் பெயராதலும் அறிக.

எனவே, உவமை செந்தமிழ்ச் செல்வமே என்க.

## அமிழ்து

இது குன்று, குன்றம் என அம் சாரியை பெற்றது போல், அமிழ்தம் என்றும் வரும். அன்றியும் அமுதம் என்றும் அமுது என்றும் மருவி வழங்கும்.

இதைப் பார்ப்பனரும் அவர்களின் அடியார்க்கடியார்களும் அம்ருதம் என்னும் வடசொற் சிதைவு என்று கதைப்பர். அது கான்றுமிழத் தக்கதோர் கதை என்க.

அமிழ்து என்பது அமிழ்+து எனப் பிரியும். இதன் பொருள் மேலிருந்து அமிழ்கின்ற உணவு என்பது. மழைக்குப் பெயர். அமிழ்+து வினைத்தொகை நிலைத் தொடர்.

அமிழ்து மழைக்குப் பெயர் என்பதென்ன? மழையானது வாழ்வார்க்குப் பயன்படும் வகையில், வளவயல் வறளாது உயிர் மருந்தாய்ப் பெய்யும் நிலையில் அமிழ்து எனப்படும். மேலிருந்து

அமிழும் உணவும் என்றும் இத்தொடரின் பொருள் கண்டு இன்புறுக. து-உணவு. இதனாற்றான் வள்ளுவரும்.

"வானின்று உலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று"

என்று குறித்தார்.

எனவே அமிழ்து, அமிழ்தம், அமுதம், அமுது என்பன அனைத்தும் தூய தமிழ்ச் சொற்களே என்க.

மழை என்று தோன்றிற்று அன்று தோன்றிற்று அதன் பெயராகிய அமிழ்து என்பது. அதன் பின் பல்லாயிரம் ஆண்டுகளின் பின் அதாவது கிரேதாயுகத்தில் பாற்கடல் கடைந்ததில் வந்ததாக உள்ள பொய்க்கதையில் வந்துள்ளது அம்ருதம் என்ற சொல்.

இதனால் அமிழ்தை அம்ருதம் என்று எடுத்தாண்டனர் வடவர் என்று தெளிதல் வேண்டும்.

## ஆலயம்

இதையும் வடசொல் என்று கூறுகின்றார்கள் பார்ப்பனரும் அவர் அடியார்க்கடியாரும். ஏன் கூறமாட்டார்கள். ஏமாந்தாரும் காட்டிக் கொடுத்தாரும் நிறைந்த தமிழகத்தில்?

ஆல் (ஆலமரம்) என்பதனடியாகப் பிறந்தது இச்சொல். ஆல் + அ+ அம் எனின் அவ்வும், அம்மும் சாரியைகள். அம் என்பது அகம் என்பதன் திரிபு எனினும் அமையும்.

ஆலயம் என்பதன் நேர் பொருள் ஆலாகிய இடம் என்பதாம்.

முன்நாளில் ஆலின் அடியில் அமைந்த நிழல் மிக்க பேரிடத்தை வழக்குத் தீர்ப்பிடமாகவும், கல்வி பயிலிடமாகவும், விழா நடைபெறுமிடமாகவும் கொண்டு பெருமைப்படுத்தினார்கள். அதுவே பிற்காலத்தில் உருவ வணக்கத்துக்குரிய இடமாயிற்று என்றும் ஆராய்ந் துரைத்தனர் அறிஞர் பலர். ஆலயம் இடம் என்ற பொருளில் இலக்கியங்களிலும் வந்துள்ளது.

... ... மழை இடிப்புண்டு ஓர் நாகம் ஆலயத்தழுங்கி
யாங்கு மஞ்சரி அவலமுற்றாள்.

(சீவக சிந்தாமணியின் 897வது பாடல்) என்று வரும் அடிகளில் ஆலயம் என்பது நாகம் தங்கும் இடம் என வந்துளது காண்க.

**தான் விளையாடி மேனாள் இருந்ததோர்**
**தகைநல் "ஆலை"த்**
**தேன் விளையாடும் மாலை யணிந்தபொற்**
**பீடம் சேர்த்தி**
**யான் விளையாடும் ஐந்தூர் அதன்புறம்**
**ஆக்கி னானே!**

என்ற சிந்தாமணிச் செய்யுளையும் நோக்குக.

எனவே. ஆலயம் காரணப் பெயராகிய தூய தமிழ்ச் சொல்லே.

## நாகரிகம்

நகர சம்பந்தம் நாகரிகம் என்று கரடி விடுவார் தமிழின் பகைவர். அன்று! நாகரிகம் தூய தமிழ்ச் சொற்றொடர் என்க. என்னை?

நாகம் என்ற சொல்லுக்கு,

**நாகம் விண் குரங்கு புன்னை**
**நற்றூசு மலை பாம்பு யானை**

என்ற நூற்பாவினால், இத்தனை பொருள்கள் இருப்பது அறியப்படும்.

எனவே, நாகம் மலைக்கும் பெயர். நாகர் என்பது மலையாளிகள் என்பதாயிற்று.

இனி, இகத்தல் என்பது பகைத்தல் வெறுத்தல் என்பதாம்.

நாகரிகம் என்பது நாகர்களை - மலையாளிகளை வெறுப்பதோர் பண்பாடு என்க. நாகரிகம் ஈறு திரிந்ததோர் ஆகுபெயர்.

பண்டு தீயொழுக்கத்தவரான ஆரியர் தமிழரால் புறந்தள்ளப் பட்டனர். அவ்வாரியர் மலைப் பாங்கில் ஒதுங்கி வாழ்ந்தனர். வாழ்ந்தும் தமிழர்க்குத் தீமை செய்தே வாழ்ந்தனர். அவர் தீயொழுக்கம் தமிழர்க்குத் தீரா வெறுப்பை உண்டாக்கிற்று. தமிழரிடத்து - ஓர் புதிய பண்பாடு தோன்றியது. நாகரை - நாகரின் தீயொழுக்கத்தை வெறுப்ப தென்று. அன்று தோன்றியதே நாகரிகம் என்பது. ஆதலின் நாகரிகம் காரணம் பற்றி வந்த செந்தமிழ்ச் செல்வமே என்க.

**- குயில், 8.7.1958**

# 7

## திராவிடம்

இது தமிழம் என்பதன் திரிபு ஆதலின் தமிழ்ச் சொல்லே. ஆரியம் அன்று. இதுபற்றிப் பல தடவைகளில் என்னால் எழுதப்பட்ட வெண்பாக்கள் இங்கே தரப்படுகின்றன.

பாலி மொழியிற் பகர்ந்த மகாவமிச
நூலில் ஒருசெய்தி நோக்குகின்றோம்: மேலாம்
தமிழ்என்ற சொல்லைத் தமிழோஎன் றார்! ஏன்?
தமிழரல்லார் நாக்குத் தவறு.

தமிழ் நாட்டை ஆசிரியர் தாலமி முன்னாள்
தமிரிசி என்றுரைத்தார். தாம்ஓர் - தமிழரல்லர்!
ஆதலினால் தோழா அயலார் ஒருசொல்லை
ஓதலினால் மாறுபடல் உண்டு.

தமிழென்று சாற்றுதற்கு மச்ச புராணம்
த்ரமிளென்று சாற்றியதும் காண்க - தமிழா
படியைப் ப்ரதிஎன்னும் பச்சைவட வோரிப்
படியுரைத்தால் யார்வியப்பார் பார்.

தமிழோவும் மற்றும் தமிரிசியும் வேறு
த்ரமிள த்ரமில்எல்லாம் சாற்றின் - தமிழின்
திரிபே அவைகள்! செழுந்தமிழ்ச் சொல் வேர்தான்
பிரிந்ததுண் டோ இங்கவற்றில் பேசு.

திரிந்ததமிழ்ச் சொல்லும் தமிழ்ச்சொல்லே ஆற்றில்
பிரிந்தவாய்க் காலும் பிரிதோ? - தெரிந்த
பழத்தைப் பயம் பளம் என்பார் அவைகள்
தழைந்த தமிழ்ச்சொற்கள் தாம்.

உரைத்தஇவை கொண்டே உணர்க தமிழ்ம்
திராவிடம்என் றேதிரிந்த தென்று! - திராவிடம்
ஆரியர்வாய் பட்டுத் திரிந்தாலும் அந்தச்சொல்
ஆரியச்சொல் ஆமோ அறி.

தென்குமரிப் பஃறுளியும் சேர்வடக்கு மாமலையும்
நன்கெல்லை கொண்ட நடுவிடத்தில் - மன்னும்
பொருள்கள் பலவாம்! பொலிந்தனவே அந்தப்
பொருள்கள் தமிழ்ப்பெயரே பூண்டு.

"திராவிடம்" தன்னந் தனியா ரியமா?
"திராவிடம்" இன்பத் தமிழின் - திரிபன்றோ!
இன்பத் தமிழகத்துக் கிட்டார் திராவிடப்பேர்
என்பார்சொல் ஏற்புடைய தன்று.

திராவிடம் என்னல் தமிழின் திரிபே
திராவிடம் ஆரியச்சொல் அன்று - திராவிடம்
வெல்கஎன்று சொன்னால்நம் மேன்மைத் தமிழர்கள்
வெல்கஎன்று விண்டதுவே யாம்.

வந்தார் மொழியா திராவிடம்? மாநிலத்தில்
செந்தமிழ்ச் செல்வமா அந்தச்சொல்! - முந்தியே
இங்குள்ள நற்பொருள்கள் எல்லாவற் றிற்குமே
எங்கிருந்து கொண்டுவந்தார் "பேர்"

## வேட்டி!

இது வேஷ்டி என்ற வட சொல்லின் சிதைவாம். இவ்வாறு பார்ப்பனரும், பார்ப்பன அடியாரும் பகர்வர்.

வெட்டப்படுதலின் வேட்டி எனத் தூய தமிழ்க் காரணப் பெயர்.

வெட்டல் என்ற தொழிற் பெயரின் அல், இறுதிநிலை கெட, வெட்டு என நின்று முதல் நீண்டது வேட்டு என. அது இ எனும் பெயர் இறுதி பெற்று வேட்டி ஆனது. அறுக்கப்படுதலின் அறுவை என்றும், துணிக்கப்படுதலின் துணி என்றும், துண்டிக்கப்படுதலின் துண்டு என்றும் வருவதும் ஒப்பு நோக்கத்தக்கதாம்.

## முட்டி

இது முஷ்டி என்ற வடசொற் சிதைவாம். முட்டுதல், முட்டு, முட்டி என வந்தது காண்க.

## ஆசாரம்

ஆசு + ஆர்வு + அம். குற்றத்தை ஆய்ந்து ஒழுகுவதோர் ஒழுக்கத்திற்குக் காரணப் பெயர். ஆர்வு என்பதில் வு தொக்கது.

பெருவாயின் முள்ளியார் அருளிச் செய்த ஒழுக்கப் பகுதியின் தொகுப்புக்கும் ஆசாரக் கோவை என்று பெயர். இத் தொடர் தமிழானதால் அப் பெயர் வைத்தார்.

## அதி

இஃது அதைத்தலில் முதனிலை வேறுபட்ட தமிழ்ச்சொல். அதைத்தல், அதை, அதி, என்பனவற்றிற்கு மிகுதி என்பது பொருள்.

**- குயில், 15.7.1958**

## 8

### அதி

இது தூய தமிழ்ச் சொல் என்றும் அதைத்தலின் முதனிலை யாகிய அதை என்பதுதான் ஆதி என்றாயிற்று என்றும் கூறி யிருந்தோம். அது பற்றி நண்பர் ஒருவர் (பெயரைக் குறிப்பிட வேண்டாமாம்) அதை என்பது அதி என்று வர இலக்கணச் சட்டம் இடந் தருகின்றதா என்று கேட்டுள்ளார்.

ஒரு சொல் வேறுபாடு உறுவதையும் மருவி வருவதையும் தமிழிலக்கணம் ஒத்துக் கொள்ளுகிறதல்லவா?. அதன்படியே அதை என்பது அதி என வேறுபட்டுள்ளது அல்லது மருவிற்று அறிதல் வேண்டும்.

இதற்கு மற்றொரு மேற்கோள் அவைத்தல், அவித்தல் என்றும், அவை என்பது அவி என்றும், வந்தது காண்க.

### ஆசிரியர்

இது வடசொல் என்று ஏமாற்றுவார். தூய தமிழ்ச் சொற்றொடர் ஆகும்.

ஆசு - குற்றம். இரியர் - நீங்கியவர். மடமை என்னும் குற்றத்தினீங்கியவர் ஆசிரியர். காரணப் பெயராதல் அறிக.

### மடம்

அறியாமையை உணர்த்தும் போது மடம் தூய தமிழ்ச் சொல்லே.

அற நிலையத்துக்கு ஆகும் போது வடமொழி என்க!

### அரங்கு

அரக்குதல் என்னும் தொழிற் பெயர் (உடலில்) புடைபெயர்ச்சி செய்தல் என்று பொருள்படும். அதன் முதனிலையாகிய அரக்கு என்பதற்கும் அதுவே பொருள்.

அரக்குதல், அரக்கு என்பவற்றின் தன்வினைகள் அரங்குதல், அரங்கு என்பது. பொருள் என்னவெனில் (உடல்) புடைபெயர்தல், அஃதாவது உடலசைதல், ஆடல் ஆகும்.

இனி, அரங்கு என்பது அம் இறுதி பெற்றும் பெறாமலும் ஆடுமிடத்திற்கு ஆனது ஓர் ஆகுபெயர் என்க!

இச் சொல் நம் செந்தமிழ்ச் செல்வமேயாகவும். இதை வடசொற் சிதைவென்று கூறுவார் கூற்று நூற்றுக்கு நூறு பொய்யென மறுக்க.

## முரலை

அண்மையில் வடசொற் பற்றுடையார் ஒருவர், இது முரலா என்ற வடசொற் சிதைவு என்று கூறினார். எரிச்சல் வந்துவிட்டது. அதனால் சிரிக்க வாய்ப்பிழந்தோம்.

ஆரியர் நாற்றமே இந்த நாவலந்தீவில் ஏற்படாத காலத்திலேயே, வட நாட்டிலிருந்த நருமதை ஆற்றுக்குத் தமிழர் முரலை என்று பேரிட்டு அழைத்தார்கள்.

முரலை என்ற தொழிற்பெயருக்கு, முரலுவது ஒலிப்பது, அதிலும் புறத்தால் ஒலிப்பது என்பது பொருள். அஃது தொழிலாகு பெயராய் முரலை ஆற்றைக் குறித்தது.

எனவே தூய தமிழ்ச் சொல் அன்றோ?

## முரலி

இது முரலுதலை-ஒலித்தலையுடையது என்ற பொருள் கொண்டது. மேலும் உள்ளால் ஒலிப்பது என்று கொண்டனர் பண்டைத் தமிழர்.

இதை வடவர் முரளி என்று கூறுவார்கள். முரலி என்பது குழலுக்கு - புல்லாங் குழலுக்குப் பெயர். தூய தமிழ்ச் சொல் என்பதை அறிந்து மகிழ்க!

## மா

இஃது மஹா என்ற வடசொற் சிதைவாம். என்னே மடமை!

மா! எனின் பெரியது, சிறந்தது, விலங்கு, மாமரம், முதலிய பல பொருள் குறிக்கும் உரிச்சொல் என்று, வடமொழி என்பது இந்நாட்டிற்கு புகுவதற்கு முன்னமே தமிழ் நூல் கூறிற்று.

பெரிது என்ற பொருளில், மாப்பெரிய என்று எழுத வேண்டும். (இடையில், ப் விரிக்கா விடில் மா பெரிது) மா என்பது மகா என்ற வடசொற் சிதைவு என்று கொண்டதாகி விடும். மா இருக்க மஹா எதற்கு?

## கண்ணியம்

இது கண்யம் என்பதன் சிதைவு என்பர் பார்ப்பனரும் அடியாரும். கண்ணல், எண்ணல், சிறத்தல் என்பன ஒன்றே.

கண்ண, கண்ணிய எனச் செய, செய்யிய எனும் வாய்ப்பாட்டு வினை யெச்சங்களாயும் வரும்.

கண்ணியம் இகரச் சாரியையும் அம் இறுதி நிலையும் பெற்ற பெயர். வடவர் சொல்லும் கண்யம் வேறு; தமிழர் கொண்ட கண்ணியம் வேறு என அறிதல் வேண்டும்.

- குயில், 22.7.1958

## 9

### காமம்

இதை வடசொல் என்றே கூறிப் பொய்ப்பர். ஏனெனில், வடமொழி நூற்களில் பெரிதும் வருவதான ஒரு சொல் இது; தமிழினின்று திருடியது.

காமக்கணிப்பசலியார் என்பது ஒரு பெண்பால் புலவர் பெயர். இதில் காமம்; கண் என்பன முதலிரு சொற்களாகும். இது காமாட்சி என்பதன் தமிழ் மொழிபெயர்ப்பு. இவ்வாறு மொழிபெயர்த்தவர் சங்கப் புலவர் என்ப. சாம்பூநதம் என்னும் ஒருவகைப் பொன்னை, நக்கீரனார் நாவலொடு பெயரிய பொலம் என்று தமிழிற் பெயர்த்ததும் காண்க. காமாட்சி என்பதில் காமம், அட்சி என்ற இரு சொற்கள் உண்டு. அட்சி மட்டும் வடசொல் ஆதலால் காமாட்சி - காமக்கண் என்றார். எனவே காமம் தமிழ்ச் சொல்லே ஆதலும், அதை வடவர் எடுத்தாண்டார் ஆதலும் காண்க. காமம் - தோற்றத்துக்கு முன்னது. அது காம்பு என்பதன் வேர்ச் சொல்லாகிய காம் என்பதனின்று தோன்றியது.

இது போல் ஓம்பு என்பதன் வேர்ச்சொல்லாகிய ஓம் என்று வழங்கி வருவதும் ஊன்றியறியற்பாலது.

### ஓம்

இது வடசொல் அன்று. தூயதமிழ்ச் சொல் - காக்க என்பது இதன் பொருள்.

### சங்கம்

"சங்கமே, கணைக்கால், ஓரம், சவை, சங்கு, புலவர், நெற்றி" என்பது நிகண்டு. சங்கம் இத்தனைப் பொருளைத் தருகிறது. சவை புலவர் என்ற பொருள் குறிக்குமிடத்து அது தமிழ் சொல்லா, வடசொல்லா என்பதுதான் ஆராய்ச்சி இங்கே.

தொல்காப்பிய காலத்துக்கு முன்பே தென்பால் தென் கழகம் என்பதொன்றும் வடபால், வடகழகம் என்பதொன்றும் இருந்ததாக

பழைய இலக்கியங்கள் நமக்கு நவிலுகின்றன. வடகழகமிருந்து கருத்து வேறுபட்டு, அகத்தியர் தென் கழகம் போந்தார் என்றும் கூறுவர். தென்கழகம் என்பது தென்னகம் என்றும், தெங்கம் என்றும் செங்கம் என்றும் 'ச' என்ற எழுத்துத் தமிழில் சொல்லுக்கு முதற்கண் வரத்துவங்கிய பின் சங்கம் என்றும் வழங்கலாயிற்று என அறிதல் வேண்டும். வடபுலம், தென்புலம் என்பன கூட முதற்கண் வடகழகம், தென்கழகம் என்ற பொருளிலேயே வழங்கினவாதல் வேண்டும். புலம் - அறிவு.

தென் கழகம் என்பதே சங்கம் என மருவியது எனின், வடபால் சங்கம் என்ற சொல் என்ன பொருளில் வழங்குகின்றது என்றால், வழங்கவில்லை என்றுதான் பதில் இறுப்போம்.

சங்கம் என்ற சொல் பிற்பட்ட தமிழிலக்கியத்துள் மட்டும் காணப்படுகின்றதும் காண்க.

சங்கம் வடமொழியன்று என்று அறுதியிட்டுக் கூறுவோம். அது தமிழ்ச் சொல்லே என்று உறுதியிட்டுக் கூறுவோம்.

## பதி

அரசன், இடம், கொழுநன், தலைவன், பதிவு, வீடு இத்தனை பொருள் பயக்கும், பதி என்பது வடசொல்லன்று. வழங்கிடுவார், வடவரும் அவர் அடியார்களும்.

**எஞ்சிய எல்லாம் எஞ்சிய இலவே.**

*- தொல்காப்பியம் மொழிமரபு, 44*

என்ற நூற்பாவின் உரையில் பதி என்பது குறிக்கப்பட்டது காண்க. அது வடசொல்லாயின் குறியார் என்க.

எனவே பதி தூய தமிழ்ச் சொல்லே.

## கலை

இதுவும் தூய தமிழ்ச் சொல்லே. மேற்படி நூற்பாவுரையும் இதை வற்புறுத்திற்று. கல்வி, ஆண்மான் என்பன இதன் பொருள்.

## பிலம்

பில்கல் என்பதன் முதனிலையாகிய பில் என்பது நீர் பொசியும் இடம். அதாவது கீழறையைக் குறிக்கும் - பில் அம் பெற்று பிலம் ஆயிற்று.

எனவே, பிலம் தூய தமிழ்ச் சொல். தொல். மொழி மரபு - 49ஆம். பாட்டின் உரை. இது தமிழ்ச் சொல்லாதலைக் குறித்தது.

## குலம்

இது குலை என்பதன் திரிபு. இதை வடவர் எடுத்தாண்டதில் நமக்கு வருத்தமில்லை. அது வடசொல்லே என்று புளுகும்போது தான் எரிச்சல் உண்டாகின்றது. இது தூய தமிழ்ச் சொல் என்பதற்கு முன் காட்டிய தொல்காப்பிய நூற்பாவின் உரையே சான்றாகும்.

**- குயில், 29.7.1958**

# 10

## அந்தணர்

இதை அந்தம் + அணர் என்று பிரித்து முதலில் உள்ள அந்தம் என்பது வடசொல் என்று கூறி. அழிவழக்காடுவர் இழிவுறு பார்ப்பாரும் இனம் கண்டு வேர்ப்பாரும்.

வேதாந்தத்தை அணவுவோர் என்பது அதன் பொருள் என்று பொய்ப்பர் அவரே!

அம்+தண் = என்பன அந்தண் என்றாயிற்று. இதன் பொருள்: அழகிய தட்பம், அஃதாவது, நாட்டார் கண்கட்கு அழகு செய்வாரின் தொண்டின் அருட்டன்மை.

இந்த. அந்தண் என்பது தமிழ்ப் பெருநூற்களில் பெரும்படியாய் வந்து பயில்வது அந்தண் சோலை, அந்தண்காவிரி என வந்துள்ளவை காண்க.

அந்தணர் என்பவர் யார்? - கூறுவோம்;

**அறந்தான் இயற்றும் அவனிலுங்**
**கோடி அதிகம் இல்லம்**
**துறந்தான் ...**

என்பது பட்டணத்தடிகள் பகர்ந்தது.

இல்லறத்தானைவிட மக்கள் நலம் கருதி இல்லம் துறந்தான் சிறந்தவன் என்று குறித்தார்.

மேலும் அதைத் தொடர்ந்தே அவர், "**அவனிற் சத கோடி உள்ளத் துறவுடையான்**" என்றும் கூறினார். அவ்வாறு இல்லந் துறந்தவனை விடச் சிறந்தவன் உள்ளத்துறவுடையான்.

எனவே துறவு இல்லத்துறவு, உள்ளத் துறவு என இரு வகைப் படும். இவ்விரண்டில், இல்லத்துறவே மேலானது மக்கட்குப் பயன்படுவதால்.

இக்கூறிய இல்லத் துறவிகளையே நம் தமிழ் முன்னோர் அந்தணர் என்றார் என்று கடைபிடிக்க. அந்தணர் என்ற சொல் அயலவர் மாசுபடாத செந்தமிழ்ச் செல்வம்.

### மனம்

மனசு என்ற வடசொல்லின் சிதைவென்பார் வந்தவரும், சில கந்தல்களும்.

மன்னுவது மனம் என்பதைத் தமிழ் மக்கள் அறிந்து ஏமாறா திருக்க வேண்டும்.

உலகுக்கு முதன் முதலில் தத்துவ நூல் (கபிலர் எண்ணூல்) தந்தவர்கள் தமிழர்கள். அதில் மனம் என்பதின் இலக்கணத்தைத் தெளிவுறுத்தியதை மன்னுவது என்ற காரணத்தால் மனம் என்று அதற்குப் பெயர் அமைத்தமையே காட்டும். மனமானது புலன்வழிச் செல்லாமல் தன்னிலையில் மன்னுவதே உணர்வு நிலை என்றும், அந்த உணர்வு நிலையே விடுதலை வீடு என்றும் கூறும் கபிலர் எண்ணூல்.

தூய தமிழ்ச் சொல்லாகிய, மனம் என்பதை வந்தவர் எடுத்துக் கொண்டனர்; வேறு வழியில்லாததால் என்று அறிந்து வைக்க.

### பிணம்

பிண் என்ற வேர்ச் சொல் நீக்கம் என்ற பொருளுடையது. உயிர் நீக்கிய உடலைக் குறிப்பது எனக் கொள்க. அதில் அம் இறுதி நிலை. எனவே பிணம் தமிழ்ச் சொல்லே.

**- குயில், 5. 8. 1958**